ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்

குறள் முழக்கம்



# மயிலைத் திருவள்ளுவர் தமிழ்ச் சங்கத்தின் மாண்புறு தமிழ்ப்பணி

**கலைமாமணி முனைவர் சேயோன்,**

**(நிறுவனச் செயலர், மயிலைத் திருவள்ளுவர் தமிழ்ச் சங்கம், சென்னை-4)**

35 ஆண்டுகளாகச் செயலாற்றிக் கொண்டு இருக்கும் வருமான வரி விலக்குப் பெற்ற, இந்திய ஒன்றிய அரசின் பதிவு பெற்ற வானவில் மனித வள மேம்பாட்டுத் தன்னார்வத் தொண்டு நிறுவனம்தான் மயிலைத் திருவள்ளுவர் தமிழ்ச் சங்கம்! இது எம்.டி.எஸ். அகாடெமி, திருக்குறள் உயராய்வு மற்றும் ஆராய்ச்சி மையம், திருவள்ளுவர் அறிவுக் களஞ்சியம் வளர்ச்சி மையம், அறிவியல் பூங்கா இதழ், யோகம் - தொழில் முனைவோர் பயிற்சி நிறுவனம், பன்னாட்டு அறிவியல் தொழில்நுட்ப இளைஞர் மையம், ஆகிய ஏழு துறைகளைக் கொண்டு வானவில் மனித வள மேம்பாட்டுத் தன்னார்வத் தொண்டு நிறுவனமாக மலர்ந்து மணம் பரப்பிக் கொண்டிருக்கின்றது.

இந்தச் சங்கத்தில் 35 ஆண்டுகளில் 65-க்கும் மேற்பட்ட நூல்களையும், 48 அறிவியல் பூங்கா இதழ்களையும், 12 அறிவியல் மலர்களையும், 5 அறிவியல் களஞ்சியங்களையும் வெளியிட்டுள்ளனர்.. ஒவ்வொரு நாளும் புலனம் மூலம் திருக்குறள் இசைச் சொல்லோவியத்தை வழங்கின்றனர். புலனம் மூலம் அறிவியல் வினாடி-வினாப் போட்டியும், அறிவியல் திறனாய்வுப் போட்டியும் நடத்தி அறிவியல் களஞ்சியம் பரிசுகளையும், விருதுகளையும் வழங்கி வருகின்றனர். இலவச மருத்துவ முகாமும் நடத்துகின்றனர்.




இந்தக் கொரோனா அச்சுறுத்தல் காரணமாக வீட்டில் முடங்கிக் கிடப்போருக்கு நல்ல பல தகவல்களையும், சிந்தனைகளையும் அள்ளி வழங்க வேண்டும் என்னும் வேணவாவில், திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைந்து இணைய வழி இதுவரை 42 அறிவியல் அரங்குகளை நடத்தி உள்ளனர். அதேபோல், மதுரைக் காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைந்து 42 இணைய வழிச் சிந்தனை அரங்குகளை நிகழ்த்தி உள்ளனர். தமிழ் நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து வாழ்ந்து காட்டுவோம் வாரீர் என்னும் பொருண்மையில் வாழ்வியல் அரங்கம் ஐந்தினையும் நடத்தி உள்ளனர். பங்கேற்கும் அனைவருக்கும் பங்கேற்புச் சான்றிதழ்களையும் வழங்கிவருகின்றனர்.

20-06-2020 அன்று நிகழ்ந்த முதல் சிந்தனை அரங்கத்தில் திருவள்ளுவர் நோக்கில் ஐக்கிய நாடுகள் அவையில் தளர்வற்ற தொடர் இலக்குகள் என்னும் பொருண்மையில் சிறப்புரை நிகழ்த்தினார் மலேசியா, கோலாலம்பூர் விவேகப் பசுமை முனையம் நிறுவனர் பேராசிரியர் முனைவர் நா.கண்ணன்.

தெய்வப்புலவர் திருவள்ளுவர் அறிவியலையும் மொழி இயலையும் இரு கண்கள் எனப் போற்ற வேண்டும் என்கிறார்.

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு திருக்குறள்-392.

இவற்றை விரிக்கின் பெருகும். இருப்பினும் மே, ஜூன் மாதங்களில் நிகழ்ந்த நிகழ்வுகளைக் காணலாம்.

**1.பனி மலையில் தமிழ்த் துளிகள் நாள்: 01-05-2021 மாலை 6-30 மணி முதல் 8-30 மணி வரை**

சுவிட்சர்லாந்து விட்டுணு துர்க்கா பீடாதிபதி அருள்திரு.சுவாமி சரவணபவானந்தா அவர்கள், இந்திய அரசின் நாடாளுமன்ற மேலவை முன்னாள் உறுப்பினர் திரு.இல.கணேசன் அவர்கள் தலைமையில் பனி மலையில் தமிழ்த் துளிகள் என்னும் தலைப்பில் மிகச் சிறப்பாகப் பேசினார்கள். அவர்தம் உரையில் சுவிட்சர்லாந்து நாட்டில் உள்ள தமிழர்களின் வாழ்நிலை சூழ்நிலை, தமிழ் மொழிக்கு ஆங்கு வாழும் தமிழர்கள் கொடுக்கும் முக்கியத்துவம் முதலானவற்றை விளக்கினார். கலை பண்பாட்டிலும் ஆன்மீகத்திலும் அங்குள்ள தமிழர்கள் எந்த அளவிற்கு ஈடுபாடு கொண்டுள்ளனர் என்பதை அங்குள்ள திருக்கோயில் விளக்கம் அளிக்கின்றன என்பதனையும் சுவிட்சர்லாந்து நாட்டின் அரசு தமிழ் மொழிக்குக் கொடுக்கும் மரியாதையையும், பல்கலைக்கழகங்களில் தமிழ் மொழி பெறுகின்ற இடத்தையும் விளக்கிக் கூறினார். அதனை வலையொளியில் (YouTube) பதிவேற்றி உள்ளனர். அதனை நீங்கள் கேட்டு மகிழலாம். அதன் இணைப்பு: https://youtu.be/eMk5rvX14R0

**2.தேம்சு நதிக் கரையில் தேன் தமிழ்! 08-05-2021 மாலை 6-30 மணி முதல் 8-30 மணி வரை**

ஐக்கிய மாநிலத் தமிழ்த்துறை நிர்வாகக் குழு அன்பர் திருமதி. சிவானந்தி கணேசராயன் அவர்கள் சென்னை காமராஜர் துறைமுகம் நிறுவனத்தின் முன்னாள் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், திரு.செ.வேலுமணி அவர்கள் தலைமையில் மிக அருமையாக உரை ஆற்றினார்கள். அவர்தம் உரையில் இலண்டன் மாநகரில் தமிழ் மொழி எந்த அளவிற்குத் தமிழர்களால்

போற்றப்படுகின்றது. தமிழ், அங்குள்ள பல்கலைக்கழகங்களில் எத்தகைய இடத்தைப் பெற்றுள்ளது? இன்னும் எந்தெந்த நிலையை அடையத் தமிழ் மக்கள் விரும்புகிறார்கள் என்பதை விரிவாகச் சொன்னார்கள். அதற்கான இணைப்பு: https://youtu.be/iFuVsFHYXVk

**3.சீனத்தில் செந்தமிழ் வளர்ச்சி! 15-05-2021 மாலை 6-30 மணி முதல் 8-30 மணி வரை**

சீன நாட்டின் தலைநகர் பெய்சிங் மாநகரில் உள்ள சீன வானொலி நிலையத்தின் செய்தி ஆசிரியர் திருமலை சோமு அவர்கள், தமிழ் நாடு அரசின் முன்னாள் அரசுச் செயலர், திருமிகு. தேவ.சோதிசெகராசன், இ.ஆ.ப. (பநி) அவர்கள் தலைமையில் நல்ல பல தகவல்களைப் புள்ளி விவரங்களுடன் மிகச் சிறப்பாகக் கூறினார். சீனா மிகத் தொன்மையான நாடாகவும் நம் தமிழ் மொழிக்கு முதன்மை வழங்கும் வகையிலும் உள்ளது. அதற்குச் சான்று ஆங்குள்ள சீனத் தமிழ் ஒலிபரப்பிற்கு இலட்சணக்காக நேயர்கள் தமிழ் நாட்டில் உள்ளனர். சீனப் பெண்கள் தங்கள் பெயர்களை நல்ல தமிழ்ப் பெயர்களாக வைத்துக் கொண்டுத் தமிழை நன்றாகக் கற்றுக் கொண்டு ஆர்வத்துடன் வானொலியில் பேசுகிறார்கள் என்று சொன்னது அனைவரின் நெஞ்சையும் நிறைத்தது. அதற்கான இணைப்பு: https://youtu.be/cgAnTIyo_TQ

**4.அமெரிக்காவில் அன்னைத் தமிழ்! 22-05-2021 மாலை 6-30 மணி முதல் 8-30 மணி வரை**

கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழகத் துணைவேந்தர், பேரா.முனைவர் பி.காளிராசு அவர்கள் தலைமையில் அமெரிக்கா நாட்டின் டல்லசு நகரில் உள்ள வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கத் தலைவர் திருமிகு

கால்டுவெல் வேள் நம்பி அவர்கள் மிக அருமையாகத் தெளிந்த நீரோடை போன்ற அரிய பல வரலாற்றுத் தகவல்களை, அமெரிக்காவில் அனைத்துத் தமிழ்ச் சங்கங்களின் செயல்பாடுகள், அவற்றின் மூலம் தமிழர்களின் குழந்தைகளுக்குக் கற்பிக்கும் தமிழ் மொழி வகுப்புகள், அதனைத் திறம்பட நடத்தும் தொண்டுள்ளம் கொண்ட தமிழ் அன்பர்கள், ஆண்டுதோறும் கொண்டாடும் பல்வகைத் தமிழ் விழாக்கள், அவற்றில் தமிழகத்திலிருந்து பங்கேற்கும் தமிழர்கள் முதலானவற்றை மிகச் சிறப்பாகப் பட்டியலிட்டுக் காட்டினார்கள். அத்துடன் அமெரிக்காவில் எத்தனைப் பல்கலைக்கழகங்களில் தமிழ் இருக்கைகள் உள்ளன என்பதை எல்லாம் மிக விரிவாகச் சொன்னார்கள். இதுபோல் இன்னும் பலவற்றை அறிய இணைப்பினைச் சொடுக்குங்கள் நேரில் கேட்டு மகிழலாம். https://youtu.be/mDUJI6sOCmU

**5.சப்பானில் தமிழ் வளர்ச்சி! 29-05-2021 மாலை 6-30 மணி முதல் 8-30 மணி வரை**

சப்பான் தோக்கியோ தமிழ்ச் சங்கத்தின் தலைவர் திரு.செந்தில்குமரன் அவர்கள், தமிழ்நாடு டாக்டர் செ.செயலலிதா மீன் வளப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர், பேராசிரியர் முனைவர் சுகுமார் அவர்கள் தலைமையில் மிகச் சிறப்பாக இனிய நல் உரையாற்றினார். அவர்தம் உரையில் சப்பானிய மொழிக்கும் நம் தாய்த் தமிழ் மொழிக்கும் எந்தெந்த வகைகளில் ஒற்றுமைகள் உள்ளன என்பதையும், சப்பான் மொழியில் நம் தமிழ்ச் சொற்கள் எப்படி விரவி உள்ளன என்பதையும் எடுத்துக் கூறியதுடன் சப்பான் மொழி அறிஞர்கள் தமிழ் மொழியில் எத்தகைய ஈடுபாடு கொண்டு பல தமிழ் இலக்கியங்களை சப்பான் மொழியில் பெயர்த்து வெளியிட்டதையும் கூறினார்.

அத்துடன் அங்கு வாழும் தமிழர்களின் நிலை, தமிழ்ச் சங்கங்களின் பங்களிப்பு, தமிழர் கொண்டாடும் விழாக்கள் முதலானவற்றை ஒரு கதை சொல்வது போல் கேட்டார் பிணிக்கும் வண்ணம் சொன்னது அனைவரின் உள்ளத்தையும் ஈர்த்து இசைவித்தது எனில் மிகையன்றே! இன்னும் அறிய இணைப்பு: https://youtu.be/KMhHeeVcf2w

**6.சூழலைப் பாதுகாத்துச் சுகமாய் வாழ்வோம்! 05-06-2021 மாலை 6-30 மணி முதல் 8-30 மணி**

உலகச் சுற்றுச் சூழல் நாள் 05-06-2021 நாளினை ஒட்டி தமிழ் நாடு அரசின் வனப்பாதுகாப்புத் துறையின் முன்னாள் தலைவர் முனைவர் எஸ். பாலாசி அவர்கள் வேலூரில் உள்ள திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் முனைவர் தாமரைச்செல்வி சோமசுந்தரம் அவர்கள் தலைமையில் மிகச் சிறப்பாகக் காணொளிக் காட்சி வழிப் பல சான்றுகளைக் காட்டி உரை நிகழ்த்தினார்கள். சுற்றுச் சூழலின் பாதுகாப்பு எந்த வகையில் மனித உயிர்களை மட்டுமன்றிக் காட்டு விலங்குகளையும், பறவைகளையும், அனைத்து உயிரினங்களையும் காப்பாற்றும் என்பதை மிக அருமையாக விளக்கினார்கள். அத்துடன் காட்டினைப் பேணிப் பாதுகாத்தால் நாம் என்னென்ன பயன்களைப் பெறலாம் என்பதையும் இன்றைக்குப் பல நோய்கள் புதிது புதிதாய்த் தோன்றித் தொற்றுவதற்கும் சுற்றுச் சூழலைப் பேணிப் பாதுகாக்காமல் இருப்பதுதான் என்பதைக் காரண காரியங்களுடன் நிறுவினார். மேலும் அறிய இணைப்பினைப் பாருங்கள்: https://youtu.be/od0PzosmP8o

மயிலைத் திருவள்ளுவர் தமிழ்ச் சங்கம் நிகழ்த்தும் அனைத்து நிகழ்ச்சிகளுமே திருவள்ளுவர் வாழ்த்துப் பாடலுடன் தொடங்கும். தொடர்ந்து திருவள்ளுவர் மந்திரம் சொல்லித்தான் நிகழ்ச்சிகள் தொடரும்.

திருவள்ளுவர் நாமத்தை வாழ்த்துவோம் வாரீர்!
தீந்தமிழ்ப் பாவலன் தெய்வப் புலவன் மேலோன்!
தேனினும் இனிய நல் திருக்குறளைத் தித்திக்கும்
செந்தமிழில் வடித்தோன் வாலறிவன்!
பகுத்தறிவுப் பகலவன் பாமரரின் நண்பன்!
பகுத்துண்ணும் பாங்கைப் போதித்தவன் பெரியோன்!
பொது நீதி வகுத்தான் பொய்யில் புலவன்
பொல்லாதகுலத்திற்கொருநீதியைச்சாடியவன் சான்றோன்!
கல்வியைக் கண் என்றான் ஒழுக்கத்தை உயிர் என்றான்
காலத்தை வென்று நம் நெஞ்சத்தில் நின்றவன் நெடியோன்! – திருவள்ளுவர் நாமத்தை

இந்தப் பாடலை எழுதித் தொடர்ந்து 10 ஆண்டுகளிலும் அனைத்து அரங்குகளிலும் பாடிய பெருமை மயிலைத் திருவள்ளுவர் தமிழ்ச் சங்கத்தின் நிறுவனத் தலைவர் மாண்பமை நீதிபதி சி.இராமகிருட்டினன் அவர்களுக்கே உரித்தாகும். அவரைத் தொடர்ந்து நிறுவனச் செயலரும் மற்ற அன்பர்களும் பாடி வருகின்றனர்.

திருவள்ளுவர் வாழ்த்துப் பாடலைத் தொடர்ந்து திருவள்ளுவர் மந்திரத்தை நிறுவனச் செயலர் கலைமாமணி முனைவர் சேயோன் சொல்லி நிகழ்வில் பங்கேற்கும் அனைவரையும் அதனைச் சொல்ல வைப்பதே சிறப்பிற்குரியது.

**வாழ்க! வாழ்க!! திருவள்ளுவர் வாழ்க!!**
**வளர்க! வளர்க!! திருக்குறள் நெறி வளர்க!!**
**திருக்குறள் உலகப் பொதுமறை! உன்னதத் தமிழ் மறை!!**
**திருக்குறள் நெறியே தமிழர் நெறி! உலக நெறி!!**
**அதுவே உன்னத நெறி!!!**

மயிலைத் திருவள்ளுவர் தமிழ்ச் சங்கத்தின் இணைய தள முகவரி: www.mtsacademy.com

# பூந்தண்டலத்தில் ஒரு பூஞ்சோலை !

**-கலைமாமணி சேயோன்**



மயிலைத் திருவள்ளுவர் தமிழ்ச் சங்கத்தின் மணிமுடி இலக்காக சென்னை மேற்குத் தாம்பரம் சிரீசாய்ராம் பொறியியல் கல்லூரிக்குப் பின்புறம் உள்ள பூந்தண்டலத்தில் "**திருவள்ளுவர் அறிவுக்களஞ்சியம் வளர்ச்சி மையம்**" என்னும் நிறுவனம் பூஞ்சோலையில் உருவாக உள்ளது,

அழகுப் பூந்தண்டலத்தில் இது ஒரு அற்புதத் திருக்குறள் பூஞ்சோலை! கடை ஏழு வள்ளல்கள் வாழ்ந்த புண்ணிய பூமி, நம் தமிழ்ப்பூமி. அந்த வகையில், சிரீ சாய்ராம் கல்விக் குழுமங்களின் தலைவர், கொடை வள்ளல் அரிமா லியோ முத்து அவர்கள், நமது மயிலைத் திருவள்ளுவர் தமிழ்ச் சங்கத்தின் அளப்பரிய தொண்டினைப் பாராட்டி நிலைத்த பணிகளைச் செய்வதற்காக பூந்தண்டலம் எனும் சிற்றூரில் 35 செண்ட்டு இடத்தை நன்கொடையாக வழங்கியுள்ளார்கள். அந்த இடத்தில் சுற்றுச் சுவர் எழுப்பி 30 க்கும் மேற்பட்ட மரக் கன்றுகளை நட்டு, அந்த வளாகத்தைப் பூஞ்சோலையாக்கி, ஆண்டுதோறும் தேசிய விழாக்களிலும், சிறப்பு விழாக்களிலும் தேசியக் கொடி ஏற்றி, இங்கு வாழும் மக்களின் குழந்தைகள், இளைஞர்கள், மகளிர், முதியோர்களுக்கு அறிவுக்களஞ்சியம் போட்டிகள் நடத்தி பரிசுகளையும் விருதுகளையும் தொடர்ந்து வழங்கி வருகிறோம்.

அண்மையில், திருவள்ளுவர் சிலையை, கலைமாமணி வி.ஜி.சந்தோசம் அவர்கள் இலவசமாக வழங்க, அதனைக் கோயம்புத்தூர் ஞானாலய வள்ளலார் கோட்ட இமயஜோதி

திரு.ஞானானந்தா சுவாமிகள், நீதியரசர்கள் திரு.டி.என்.வள்ளிநாயகம், திரு.ப.ஜோதிமணி, தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் கோ.பார்த்தசாரதி அவர்கள் முன்னிலையில் திறந்து வைத்து வாழ்த்தினார்கள். இப்பூத்தண்டலத்தில் நல்ல பல நிகழ்வுகளை நடத்த திட்டமிடப்பட்டுள்ளன.

1.சிற்றூர்ப்புற இளைஞர்களுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை வழங்கிப் பணியில் அமர்த்துவது.

2.மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு, ஆளுமை வளர்ச்சிப் பயிற்சியும், தொழில் முனைவோர் பயிற்சியும் வழங்கல்.

3.இளைஞர்களுக்கான பல்லூடகத் தெரிவிப்பியல் திறன் பயிலரங்கம் நடத்துதல்.

4.குழந்தைகள், இளைஞர்கள், மகளிர், முதியோர் முதலானோர்க்கு, அறிவுக்களஞ்சியம் போட்டிகளை, ஆண்டுதோறும் நடத்தி அறிவுக் களஞ்சியம் பரிசுகளையும், விருதுகளையும் வழங்கல்.

5.சமூக வானொலி நிலையம் அமைத்து சமுதாய விழிப்புணர்வு, சுற்றுச் சூழல் பாதுகாப்பு, சுகாதார மேம்பாடு, கலை, பண்பாடு, மேலாண்மைத் திறன், மற்றும் வாழ்வியலை அறிவூட்டல்.

6.கிராமப்புற விளையாட்டுக்களில், இளைஞர் களுக்குப் பயிற்சி அளித்து, மாநில, தேசிய மற்றும் உலக அளவிலான போட்டிகளில் பங்கேற்றுப் பயன்பெற வழிவகைகள் செய்தல்.

7.உலக இளைஞர் வளர்ச்சித் திட்டத்தின் மூலம், ஆண்டுதோறும் அறிவுக்களஞ்சியம் போட்டிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட குழந்தைகள், இளைஞர்களுக்கு அதி நவீனப் பயிற்சி அளித்து, அவர்களை உலகத் தரம் மிக்க இ௱உன்னதத் திறன் மிக்கவர்களாக உருவாக்கி, பல்வேறு நிலையில் பங்கேற்றுப் பயன்பெற அரியதொரு வாய்ப்பினை வழங்கல்.`

இந்தத் திட்டங்களுக்குச் செயல் வடிவம் கொடுப்பதற்காக, கட்டிடக் கலை வல்லுநர்கள் வழங்கிய கட்டிட வரை படங்களை வழங்கி உள்ளனர். இந்தக் கட்டிடங்கள் உருவாவதற்கு ரூபாய் ஒரு கோடிக்கான நிதியைத் திரட்ட வேண்டிய கட்டாயத்தில் நாம் உள்ளோம். அதற்காக, 100 கொடையாளர்களை இனங்கண்டு, ஆளுக்கு ஒரு இலட்சம் பெற்றால், அதனை மிக எளிதில் சேர்த்துவிடலாம் என்ற நம்பிக்கை உறுதியாக உள்ளது. அந்த 100 கொடையாளர்களின் பெயர்கள், கொடையாளர் களுக்கான, சிறப்புக் கல்வெட்டில், பொன்னெழுத்துக்களில் பொறிக்கப்படும். இந்தக் கிராம மக்கள் மட்டுமன்றி, சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்ட கிராமங்கள் அனைத்திற்கும், இது ஓர் முன்னோடித் திட்டமாகத் திகழும் என்பது உறுதி!

இதுவரை ஒரு இலட்சம் ரூபாய் கொடுத்த கொடையாளர்களின் பெயர்களைச் சொல்ல வேண்டியது நம் நம் கடமையாகும். வழிகாட்டும் முன், வாழ்ந்து காட்டுவோம் என்கிற வகையில், சேயோன் குடும்பத்தினர் ஆளுக்கொரு இலட்சம் வழங்கி விட்டனர்.

1. கலைமாமணி முனைவர் ந.முருகன் (சேயோன்)
2. முனைவர் திருமதி இராசேசுவரி முருகன்
3. திரு.முரளீதரன் முருகன், சேயோனின் மூத்த மகன்

4. திருமதி மதுமிதா முரளீதரன் மருமகள்
5. திரு. நிரஞ்சன் முருகன், சேயோனின் இளைய மகன்
6. அரிமா சா.கீர்த்திவாசன், தலைவர், சந்திராம்மாள் கல்வி அறக்கட்டளை,
7. ஆரோக்கியா எண்ட்பிரசைசு லிமிடெட், சேலம்.
8. துணைவேந்தர் முனைவர் கோ.பார்த்தசாரதி, தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகம், சென்னை.
9. திருமதி மங்கையர்க்கரசி பார்த்தசாரதி, சென்னை.
10.திரு.ச.குமரகுருபரன், நிறுவனர், வைட்டாலியம் செயற்கைப் பல் தயாரிப்பு நிறுவனம், சென்னை.
11.திருமதி மீனாட்சி குமரகுருபரன்.

இந்தப் பட்டியலில் தங்களின் திருப்பெயரும் இடம்பெறும் வகையில் ஆளுக்கொரு இலட்சம் கொடுத்துக் கொடையாளர் பட்டியலில் இடம்பெற்று நீங்களும் மகிழலாமே!. பூந்தண்டலம் கல்விப் பூஞ்சோலையாக மலர்ந்து மணம் பரப்புமல்லவா?

திருவள்ளுவர் அறிவுக்களஞ்சியம் வளர்ச்சி மையத்தை உருவாக்க, உதவிக் கரம் நீட்டுங்கள். தாங்கள் வழங்கும் நன்கொடைக்கு வருமான வரி விலக்கு உண்டு. நல்லதோர் வாய்ப்பு! தங்களின் பெயரும், வரலாற்றைப் பறைசாற்றும் கொடையாளர் கல்வெட்டில், பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படும்! பூந்தண்டலம் திருவள்ளுவர் பூஞ்சோலையைக் காண வாருங்கள்!!

வாருங்கள்! திருவள்ளுவர் அறிவுக் களஞ்சிய மையத்தை

ஊர்கூடித் தேரிழுக்க, நிதி தந்து பெருமை கொள்ள வாருங்கள்!

# கலைமாமணி முனைவர் சேயோனின் திருக்குறள் நெறித் தொண்டு

**-பேராசிரியர் முனைவர் ஏமா சந்தானராமன்**

அகில இந்திய வானொலியில் 33 ஆண்டுகள் பல்வேறு பொறுப்புக்களில் திருச்சிராப்பள்ளி, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் சென்னை வானொலி நிலையங்களில் பணியாற்றி நிறைவாகச் சென்னை வானொலியின் வர்த்தக ஒலிபரப்பு நிலைய இயக்குநராகப் பணியாற்றி 2012 ஆம் ஆண்டு டிசம்பரில் ஓய்வு பெற்றவர்.



தமிழ் நாடு அரசின் 2013 ஆம் ஆண்டிற்கான திருவள்ளுவர் விருதினையும், 2004-ஆம் ஆண்டின் கலைமாமணி விருதினையும் பெற்றவர். ஸ்ரீராம் இலக்கியக் கழகத்தின் மகாகவி பாரதியார் விருதினை 2000-த்திலும் பாரதி தமிழ்ப் பணிச் செல்வர் விருதினை 1990-லும் பெற்றவர். 1999-இல் நூற்றாண்டு அறக்கட்டளையின் சேவா ரத்னா விருதினையும், 2006-இல் திருவாவடுதுறை ஆதீனத்தின் திருக்குறள் செம்மல் விருதினையும், 2002-இல் பொங்கு தமிழ் வளர்ச்சி அறக்கட்டளையின் குறள் நெறிச் செல்வர் விருதினையும், 2003-இல் குவைத் நாட்டின் வளைகுடாக் கவிஞர்கள் சங்கத்தின் குறள் அமுதன் விருதினையும், திருவள்ளுவர் ஆத்திசூடி புதிய படைப்பிற்காக குன்றக்குடி ஆதீனத்தின் கலைச்செல்வர் விருதினை 1990-லும், வானொலி வழித் திருக்குறளையும் கல்விச் சேவையையும் செய்ததற்காக மால்கம்

ஆதிஷேஸய்யா விருதினை 1994லும், தந்தை பெரியார் விருதினை 2006-லும் பெற்றவர். இப்படி 60-க்கும் மேற்பட்ட விருதுகளைப் பெற்றவர்.

உள்ளுவது எல்லாம் உயர்வு உள்ளல் என்னும் உயரிய நோக்குடன், தெய்வப்புலவர் திருவள்ளுவரின் திருக்குறள் நெறிப்படி, அறிவியலையும், மொழியியலையும் இரு கண்களாகப் போற்ற வேண்டும் என்னும் சீரிய கொள்கையோடு, மனித வளத்தை மூலதனமாக்கி நாட்டு வளர்ச்சிக்கு நாளும் பாடுபட வேண்டும் என்னும் தொலை நோக்குப் பார்வையுடன் முப்பது ஆண்டுகளாகத் திருக்குறள் தொண்டாற்றிக் கொண்டிருக்கும், வருமானவரி விலக்குப் பெற்ற வானவில் மனித வளமேம்பாட்டுத் தன்னார்வத் தொண்டு நிறுவனமான மயிலைத் திருவள்ளுவர் தமிழ்ச் சங்கத்தின் நிறுவனச் செயலர்தான் சேவா ரத்னா, கலைமாமணி டாக்டர் சேயோன்!

மயிலாப்பூர் திருவள்ளுவர் திருக்கோயிலை நிலைக்களனாகக் கொண்டு1986-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 7ஆம் நாள் தொடங்கப்பட்டது மயிலைத் திருவள்ளுவர் தமிழ்ச் சங்கம். தொடக்கவிழாவிற்குத் தலைமை வகித்தவர் அப்போதைய தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் டாக்டர் அவ்வை நடராசன். குத்துவிளக்கேற்றியவர் கவிஞர் சௌந்தரா கைலாசம் அவர்கள். வாழ்த்துரை வழங்கியவர் திருக்குறளார் முனிசாமி அவர்கள். தொடக்க விழாச் சிறப்புரை ஆற்றியவர் உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி நீதியரசர் ச.மோகன் அவர்கள்.

5-ஆம் வகுப்புப் படிக்கும்போதே திருக்குறள் போட்டியில் முதல் பரிசு பெற்று அன்று முதல் பல திருக்குறள் போட்டிகளில் பங்கேற்றுப் பரிசுகளைப்

பெற்றதுடன் திருக்குறள் நெறிப்படி வாழ்ந்து வருகிறார். தான் வாழ்வது மட்டுமன்றித் தமிழர்கள் அனைவரும் திருக்குறள் நெறியைப் பின்பற்றி வாழ வேண்டும் என்னும் குறிக்கோளில், மயிலாப்பூர் திருக்கோயிலில் முப்பது ஆண்டுகளுக்கு முன் தோற்றுவித்ததுதான் மயிலைத் திருவள்ளுவர் தமிழ்ச் சங்கம்!

குறிப்பாக மயிலைத் திருக்குறள் சங்கம் நிகழ்த்தும் அனைத்து விழாக்களிலும் தமிழ்த்தாய் வாழ்த்தினைத் தொடர்ந்து, விழாவில் பங்கேற்கும் அனைவரையும் நிமிர்ந்து உட்காரச் சொல்லி, இவர் திருவள்ளுவர் வாழ்த்தினை அம்ஸத்வனி இராகத்தில் பாடி, விழாவில் பங்கேற்கும் சிறப்பு விருந்தினர்களையும், பார்வையாளர்களையும் திருவள்ளுவர் மந்திரம் சொல்ல வைக்கும் முறை பெரிதும் போற்றத் தக்கது. அனைவரும் பின்பற்றத் தக்கது.

வாழ்க! வாழ்க! திருவள்ளுவர் வாழ்க!
வளர்க! வளர்க! திருக்குறள் நெறி வளர்க!!
திருக்குறள் உலகப் பொதுமறை! உன்னதத் தமிழ் மறை!
திருக்குறள் நெறியே தமிழர் நெறி! அதுவே
உலக நெறி! உன்னத நெறி-

என்னும் திருவள்ளுவர் மந்திரத்தைத் திருக்குறள் விழாக்களில் மட்டுமன்றி, அறிவியல் விழாக்கள், கருத்தரங்குகள், அறிவியல் தொழில் நுட்ப மாநாடுகளிலும் நிகழ்த்துவது மிகுந்த பாராட்டுக் குரியதாகும். அத்துடன் அதனைத் தமிழ் நாட்டில் மட்டுமன்றி புதுடில்லி, அந்தமான் நிக்கோபார் தீவுகள், இலட்சத் தீவுகள் ஆகியவற்றிலும் நிகழ்த்தியது உச்சிமேல் வைத்து மெச்சத்தக்கதாகும்.

திருவள்ளுவர் எழுதாத ஆத்திசூடியைத் திருக்குறளில் இனங்கண்டு 133 ஆத்திசூடி நீதிகளைத் தொகுத்து அதற்குத் திருவள்ளுவர் ஆத்திசூடி என்னும் பெயரிட்டழைத்து அதற்கு

மூலமும் உரையும் எழுதி வெளியிட்டிருப்பது தமிழ் இலக்கிய உலகுக்குப் புது வரவு. அதனைத் திருக்குறளார் முனிசாமி, பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன், தவத்திரு குன்றக்குடி அடிகளார் வரவேற்றுப் பாராட்டி இருப்பது சிறப்புக்குரிய செய்தியாகும். மேலும் தவத்திரு குன்றக்குடி அடிகளார் 1989 ஆம் ஆண்டு இவருக்குக் கலைச்செல்வர் விருது வழங்கிப் பட்டயம் வழங்கியுள்ளார். அதில் திருவள்ளுவர் ஆத்திசூடியைத் தமிழ் உலகுக்குத் தந்த சேயோன் எனச் சொல்லி இருப்பது இவருக்கு இன்னொரு பாராட்டுப் பதக்கமே!.



சென்னை வானொலி மாநகரப் பண்பலை ஒலிபரப்பில் ஒவ்வொரு நாள் இரவு 9-மணி முதல் 10-மணி வரை 1998 முதல் 2010 வரை 12 ஆண்டுகள் ஒலிபரப்பான வண்ணக் களஞ்சியம் நிகழ்ச்சியில் முதலில் இவர் திருக்குறள் அமுத மொழி எனச்சொல்லி ஒரு திருக்குறளுக்கு 5 மணித்துளிகளுக்கு விளக்கம் கூறுவதுடன் திருக்குறள் நெறி பரப்பும் பாடலையும் இசையுடன் பாடியது எண்ணற்ற நேயர்களின் இதயங்களைத் தொட்டது எனில் மிகையன்றே! அதிலும் நிறைவில், திருக்குறள் உலகப் பொதுமறை! உன்னதத் தமிழ் மறை! திருக்குறள் நெறியே தமிழர் நெறி! அதுவே உலகநெறி! என்று அவர் சிம்மக் குரலில் வானொலியில் முழக்கமிட்டது இன்றும் காதுகளில் ஒலித்துக்கொண்டிருக்கின்றது.

இவரின் தன்னலமற்ற பொது நலத் திருக்குறள் நெறித் தொண்டினைப் பாராட்டும் வண்ணம் இந்து ஆங்கில இதழ் உண்மையான திருக்குறள் நெறித் தொண்டர் (A True Priactitioner of Thiruvalluvam) என்றும், மயிலை டாக் (Mylai Talk) என்னும் ஆங்கிலப் பத்திரிகை திருக்குறள் இவரின்

வாழ்க்கை நெறிமுறை (Thirukkural is his way of life) என்றும், தினகரன் நாளிதழ் சேயோன் இதயத்தில் திருக்குறளுக்கு எப்போதுமே தனி இடம் என்றும் பாராட்டி உள்ளன.

இன்னொரு இன்றியமையாச் சிறப்பு இவரின் அத்தனைத் திருக்குறள் நெறித் தொண்டிற்கும் வாசுகி அம்மையார் போல் பெருந்துணையாக இருப்பவர் இவரின் துணைவியார் டாக்டர் இராஜேஸ்வரி முருகன், முன்னாள் பொது மேலாளர், பி.எஸ்.என்.எல். தொலைபேசி மத்திய பொதுத் துறை நிறுவனம். இவர்கள் இருவரும் இந்திய அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டனர். கடந்த இரண்டு ஆண்டுகளாக இருவரும் இணைந்து திருக்குறளை அடிப்படையாகக் கொண்ட ஆளுமை வளர்ச்சிப் பயிலரங்கினைக் குழந்தைகளுக்கும், இளைஞர்களுக்கும் பாரதிய வித்யா பவனில் நிகழ்த்திக் கொண்டிருப்பது குறிப்பிடத் தக்க பாராட்டப்பட் வேண்டிய செயலாகும்.

அனைத்திற்கும் மகுடம் வைத்தாற்போல் இருவரும் இணைந்து திருக்குறள் நெறிமுறைத் திருமணம்-மங்கலச் சொல்லோவியம் குறுந்தகட்டினைத் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளில் விளக்கம் அளித்து, மணமகன் உறுதி மொழி, மணமகள் உறுதி மொழி, மணமக்கள் உறுதி மொழி உணர்த்தும் பத்துக் குறட்பாக்களை இசையுடன் வழங்கியுள்ளனர். இதனை அனைவரும் கேட்டால் குறிப்பாக இளைஞர்கள் கேட்டால் திருக்குறள் நெறிப்படித் திருமணம் செய்யவேண்டும் என்னும் உத்வேகம் உருவாகும். பெற்றோர்களும் பெரியோர்களும் கேட்டால் இந்தத் திருமணமுறையை வரவேற்று மகிழ்வர்.

திருக்குறள் நெறிமுறைத் திருமண உறுதிமொழிகளை வாழ்க்கையில் கடைப்பிடித்தால் நம் நாட்டில் முதியோர் இல்லங்கள் இல்லாமல் போகும். வேரும் விழுதும்

கூடிமகிழும் பண்டைய கூட்டுக் குடும்ப வாழ்க்கை மீண்டும் மலர்ந்து மணம் பரப்பும்.

திருக்குறள் இசைச் சொல்லோவியம் என்னும் குறுந்தகட்டினை வெளியிட்டுள்ளார். இதில் 133 அதிகாரங்களையும் 133 இராகங்களில் இசை அமைத்து, 1330 அருங்குறட்பாக்களையும் இசை அமைத்து விளக்க உரையும் வழங்கியுள்ளார். இசை அமைத்துப் பாடியிருப்பவர் இராணி மேரி கல்லூரி இசைத்துறைப் பேராசிரியர் டாக்டர் அபிராமசுந்தரி அவர்கள்.

சேவாரத்னா, கலைமாமணி டாக்டர் சேயோன் மயிலைத் திருவள்ளுவர் தமிழ்ச் சங்கத்தின்வழி ஆற்றிவரும் திருக்குறள் பணிகள்!

1.திருக்குறள் விரைவுத் தொடர் இரயில் கன்னியாகுமரி முதல் நிஜாமுதீன் வரை 14-10-2002. புதுடில்லியில் நிகழ்த்திய மூன்று நாட்கள் திருவள்ளுவர் திருவிழாவின் தாக்கம்.

2.தொலைபேசி வழித் திருக்குறள் இசையுடன் ஒலித்தது 15-01-2005 முதல் 2011 வரை. தொலை பேசி எண்: 1250-113. வானொலியில் தொடர்ந்து சங்க நிறுவனச் செயலர் டாக்டர் சேயோன் 10 ஆண்டுகள் திருக்குறள் அமுதமொழி வழங்கியதன் விளைவு.

3.சென்னை வானொலி வண்ணக் களஞ்சியம் வழித் திருக்குறள் அமுத மொழியைச் சங்க நிறுவனச் செயலர் டாக்டர் சேயோன் இசையுடன் விளக்கம் அளித்தது.

4.பன்னாட்டுத் திருக்குறள் கருத்தரங்கம் சென்னை அண்ணா பல்கலைக் கழகத்தில் 2004 ஆம் ஆண்டில் சனவரி 15 முதல் 18 வரை நிகழ்த்தியது.

5.அறிவியல் பூங்கா காலாண்டு இதழை 2005 முதல் வெளியிடுகிறோம். அதில் ஒவ்வொரு பக்கத்திலும் திருவள்ளுவர் ஆத்திசூடியைச் சேர்த்திருப்பது.

6.தேசியத் திருக்குறள் கருத்தரங்கம் மூன்று- 2002-இல் புதுடில்லியிலும், 2011, 2012-இல் சென்னையிலும்.

7.மாநில அளவிலான திருக்குறள் கருத்தரங்குகள் கருத்தரங்குகள் – 5

8.மாநில அளவிலான திருக்குறள், திருவள்ளுவர் ஆத்திசூடி ஒப்பித்தல் போட்டி, பேச்சுப் போட்டிகள் தொடர்ந்து 3 ஆண்டுகள் 2004 முதல் 2007 வரை ஆறு மா நகராட்சிகளில் நடத்தியதில் 5 இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் பயன்பெற்றுள்ளனர்.

9.மயிலாப்பூர் திருவள்ளுவர் திருக்கோயிலில் தொடர்ந்து முப்பது ஆண்டுகள் திருவள்ளுவர் தினத்தையொட்டித் திருக்குறள் போட்டிகளையும், பட்டிமன்றங்களையும் நடத்துகின்றார்.

10.திருக்குறள் சிந்தனை அரங்குகளைத் திருவள்ளுவர் திருக்கோயிலில் தொடர்ந்து 15 ஆண்டுகள் நடத்தி அதன் பொழிவுகளை நூல்களாக வெளியிட்டிருப்பது.

11.திருவள்ளுவர் போற்றும் பத்துடைமைகளப் பெற்றுப் பாங்குடன் நூறாண்டுகள் வாழ்க என வாழ்த்து மடல்களை 3,000-க்கும் மேற்பட்ட திருமணத் தம்பதியர்க்குத் திருவள்ளுவர் வாழ்த்தினைவழங்கி உள்ளார்.

12.ஆண்டு மலர்களையும் 62-க்கும் மேற்பட்ட நூல்களையும், வெளியிட்டுள்ளார். திருக்குறள் தெளிவுரை, திருவள்ளுவர் ஆத்திசூடி ஆகியவற்றின் மலிவுப்

பதிப்புகளை வெளியிட்டுத் தேங்காயோடு திருக்குறளையும் வழங்க வகை செய்கிறோம். திருக்குறள், திருவள்ளுவர் ஆத்திசூடி, மயிலேறு மாணிக்கம் நூல்களின் இந்தி மொழி பெயர்ப்புக்களை வெளியிட்டுள்ளார்.

13.1330 திருக்குறட்பாக்களையும் காணொளிக் காட்சிகளில் இசையுடன் கூடிய விளக்க உரையை 25 மணி நேரத்தில் நடத்துகின்றனர்..

14.இலவசத் திருக்குறள் வகுப்பினை மூன்று மாதங்களுக்கு நிகழ்த்திச் சான்றிதழ்களும் பரிசுகளும் வழங்குகின்றார்.

15.இணைய தளங்களிலும், முகநூல், மின்-நூல், யு-டியூப், பிளாக் போன்றவற்றில் சங்க நிகழ்வுகள் உலகத் தமிழர்கள் அனைவரும் கண்டு மகிழ வகை செய்துளளார். முகநூலில் தினம் ஒரு திருக்குறள் அமுதமொழி விளக்கத்தைப் படத்துடன் வெளியிடுகின்றனர். ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் நாளும் படித்துப் பயன்பெறுகின்றனர். மேலும் வாட்ஸ் ஆப்பில் தினம் ஒரு திருக்குறளை இசைச் சொல்லோவியமாக வழங்குவதுடன் அதற்கான கருத்துரை தமிழ், ஆங்கிலம் இரு மொழிகளிலும் வண்ணப்படத்துடன் மூன்று ஆண்டுகளாக அனுப்பி வருகிறார்.

அனைத்திற்கும் முத்தாய்ப்பாக சிரீசாய்ராம் கல்விக் குழுமங்களின் தலைவர் அரிமா லியோ முத்து அவர்கள், மேற்குத் தாம்பரத்தில் உள்ள ஸ்ரீ சாய்ராம் பொறியியல் கல்லூரியின் பின்புறமுள்ள பூந்தண்டலம் கிராமத்தில் இலவசமாக வழங்கியுள்ள 35 செண்ட் நிலத்தில் திருவள்ளுவர் அறிவுக்களஞ்சியம் வளர்ச்சி மையத்தை உருவாக்கி வருகின்றார்.

இந்தப் புத்தாண்டில் திருவள்ளுவர் தினமான 16-01-2019 அன்று திருவள்ளுவர் வானொலியை இணையத்தின் வழி தொடங்கி அறிவுக்களஞ்சியம் என்னும் பல்சுவை நிகழ்ச்சியை வழங்கி வருகிறார் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். இவற்றை எல்லாம் ஆவணப்படுத்தும் வண்ணம் மயிலைத் திருவள்ளுவர் தமிழ்ச் சங்கத்தின் அணைத்துச் சாதனைகளையும் பட்டியலிட்டுச் சிறப்பிதழாக 39-வது அறிவியல் பூங்காகாவினை வெளியிட்டிருப்பது கலைமாமணி, திருவள்ளுவர் விருதாளர், சேவா ரத்னா முனைவர் சேயோனின் இடையறாக் கடின உழைப்பே எனில் மிகை அன்று!

வாழ்க முனைவர் சேயோனின் திருக்குறள் நெறித் தொண்டு!

**உலகத் திருக்குறள் இணையக்கல்விக்கழகம்** வெளியிடும் செய்திமடல் (திங்கள்தோறும் பத்தாம்நாள் வெளிவருகின்றது.)

வள்ளுவர் குறளை வையகமெங்கும் பரப்புவது நம் கடமை. அதனைப் போன்றே வையகமெங்கும் நடக்கும் திருக்குறள் தொடர்பான நிகழ்ச்சிகள் அனைத்தையும் ஒருங்கு திரட்டி ஓர் இதழ் மூலமாகத் தமிழ்மக்கள் அனைவரும் அறியும்வண்ணம் வழங்குவதும் இன்றியமையாததே.உலகையே சுருட்டி சட்டைப்பையில் இருக்கும் கைப்பேசி வழியாக அறிமுகப்படுத்தும் இணையமும் புலனமும் நமக்கு இப் பணியில் துணைநிற்கும்போது நாம் வாளா இருக்கலாமா?

ஆங்கிலத் திங்கள்தோறும் பத்தாம் நாள் உலகத் திருக்குறள் இணையக் கல்விக் கழகத்தினால் வெளிவரும் இந்த செய்திமடல் உங்களுக்கானது.நீங்கள் உலகின் எந்த மூலையிலிருந்தாலும் உங்கள் பகுதியில் நிகழும் குறள் தொடர்பான நிகழ்ச்சிகளை எங்களுக்கு எழுதியனுப்புங்கள்.வழமையான ஒருங்குறி (யூனிகோடு) அச்சுருக்களைப் பயன்படுத்தி சொல் கோப்புகளாக (MS Word) anjal@kuralvirtual.com என்னும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புங்கள்.படங்கள் இருப்பின் அவற்றையும் தனியே படக்கோப்புகளாக அனுப்புங்கள்.

குறளைப் பரப்பும் பணியில் முனைந்துள்ள அமைப்புகளையும் சான்றோர்களையும் பற்றி எமக்குத் தெரிவியுங்கள்.அவ் விவரங்கள் வெளிவந்தால் குறள்பரப்பும் பணிக்கு அறிந்தேற்பு வழங்கிய நிறைவு நம் அனைவருக்குமே ஏற்படும் அன்றோ?

இணையவழி இலவசத் தனிச்சுற்றுக்கு விற்பனைக்கு அல்ல.